# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.41/2022

DW1– வசந்தா நாள்.06.08.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் வாதி பாப்பாத்தியிடம் கடன் வாங்கியுள்ளேன். ரூ.5லட்சம் வாங்கினேன். சித்தப்பா மகள் ராணி கடன் தருவதாக சொன்னார். வாதி எனக்கு தெரிந்தவர் தான். வாதியிடம் பணம் எந்த வருடம் வாங்கினேன் என்று ஞாபகமில்லை. பணம் வாங்கியதற்கு கடன் பத்திரம் எழுதப்பட்டது. செட்டிக்குளத்தில் பத்திரம் எழுதப்பட்டது. நான் பணம் வாங்கும்போது என்னுடன் செந்தில், கலையரசன் இருந்தார்கள். அவர்கள் தற்போது இருக்கிறார்கள். பத்திர காகிதத்தை வாதி வாங்கினார். அவர் மகன் பெயரில் வாங்கினார். பத்திர எழுத்தர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ள விவரங்களை யார் சொல்லி எழுதப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. பத்திரத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்தார்களா என்றால் பாதி சொன்னார்கள், பாதி சொல்லவில்லை. பத்திரத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்த பின்னர் தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. வட்டி எவ்வளவு பேசப்பட்டது என்றால் ரூ.2/– என்று பேசப்பட்டது. ரூ.1,20,000/– வட்டி கொடுத்துள்ளேன். வட்டியை பத்திரத்தில் பின்பக்கத்தில் வரவு வைக்கவில்லை. வரவு வைக்க கேட்டீர்களா என்றால் கேட்டேன் அவர்கள் வரவு வைத்து தரவில்லை. செந்தில் மற்றும் கலையரசினிடம் வாதி வட்டி வரவு வைக்க மறுக்கிறார் என்று நான் சொன்னேன். வட்டியை வாதி வீட்டில் வந்து வாங்கிக்கொண்டார். மொத்தமாக ரூ.1,20,000/–வாங்கிக்கொண்டார். வட்டி வாங்கிகொண்டதற்கு ஆதாரம் கொடுக்காத சம்மந்தமாக நான் சட்டநடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எதிர்வழக்குரையில் ரூ.1,20,000/–வட்டி கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் ரூ.1,20,000/– கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வட்டி வாங்கியது சம்மந்தமாக நான் வேறு வழக்கு எதுவும் தாக்கல்

செய்யவில்லை. நான் கூறுவது போன்று ரூ.1,20,000/- வட்டி எதுவும் வாதிக்கு கொடுக்கவில்லை என்றும் நான் ரூ.6லட்சத்தை கடனாக வாங்கினேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக வாதியிடம் வட்டி செலுத்தியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.